சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No.15/2020

பெயர்: விஜயா, வா.சா. 1 தேதி **17.10.2025**

4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு 60 வயது. பிறந்த தேதி, ஆண்டு தெரியாது. எனது வீட்டில் மூத்தவர் யார் என்றால் சரசு, அவர் எனது அக்கா(1ம் பிரதிவாதி). 4வது பிரதிவாதிக்கு சுமார் 55 வயது இருக்கும், ஐந்தாவது பிரதிவாதிக்கு 45 வயது இருக்கும். வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் என் தாயார் உயிருடன் இருந்தார். எனது தாயார் இறந்தபோது அவரது வயது என்ன என்றால் சுமார் 80 வயது இருக்கும். 8வது பிரதிவாதியான வெள்ளையம்மாளுக்கு வயது என்ன என்றால் சுமார் 80 இருக்கும். எனது தாயாரும் வெள்ளையம்மாளும் அக்காள்- தங்கை. எனது தாயார் தான் அக்காள், 8வது பிரதிவாதி தங்கை. மேற்படி இருவரில் யாருக்கு முதலில் குழந்தை பிறந்தது என்றால் என் அம்மாவிற்கு தான் முதலில் குழந்தை பிறந்தது. அதற்காக ஆதாரம் எதுவும் இல்லை. எனது தகப்பனார் முதலில் எனது தாயாரை திருமணம் செய்தாரா அல்லது 8வது பிரதிவாதியை திருமணம் செய்தாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது ஆனால் எனது தாயார் சொல்லி அவரை முதலில் திருமணம் செய்ததாக தெரியும். நாங்கள் ஊராளிகவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள். எங்கள் சமூகத்தில் ஒரே மேடையில் இருவரை திருமணம் செய்யும் வழக்கம் உண்டு என்றால் உண்டு. என் தகப்பனார் ஒரே மேடையில் மேற்படி எனது தாயாரையும், 8வது பிரதிவாதியையும் திருமணம் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது தாயார் மற்றும் 8வது பிரதிவாதியை எனது தகப்பனார் எந்த தேதியில்,எந்த மாதம், எந்த ஆண்டு திருமணம் செய்தார் என்று தெரியாது. 8வது பிரதிவாதியின் வாரிசுகள் 3 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தாயாருக்கு பிறந்தவர்கள் நான் மற்றும் 1, 2 பிரதிவாதிகள். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் சுமார் 4 வருடங்கள் இருக்கும். எனக்கு திருமணம் ஆகி 35 வருடங்கள் ஆகிவிட்டது. திருமணத்திற்கு பின்னிட்டு நான் எனது கணவர் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். நான்உள்ளூரில் தான் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் கண்ட சொத்துக்கள் எங்கெங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது, சொத்துக்கள் அனைத்தும் ஒரே இடத்தில் இல்லை என்றால் சரிதான். மொத்தம் எத்தனை ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 27 ஏக்கருக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 27 ஏக்கருமே எனது தகப்பனார் மாணிக்ககவுண்டருக்கு பாத்தியப்பட்டதா என்றால் ஆமாம். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலகட்டத்திலேயே 4, 5 பிரதிவாதிகளுக்கு சொத்துக்களை பிரித்துக்கொடுத்துவிட்டாரா என்றால் எனக்கு தெரியாது. எங்களுக்கு தெரியாமல்

கொடுத்துவிட்டார். அதற்காக செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டாரா என்றால் சரிதான். 2011ம் ஆண்டே எழுதிக்கொடுத்துவிட்டாரா என்றால் ஆமாம். இரண்டு பேருக்கும் தனித்தனியாக பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டாரா என்றால் ஆமாம். அவரவர்களுக்கு எழுதிக்கொடுத்த சொத்தில் அவரவர்கள் அனுபவம் செய்து வருகிறார்களா என்றால் இல்லை, நாங்களும் அனுபவம் செய்து வருகிறோம். தற்போது 4, 5 பிரதிவாதிகள் சொத்துக்களை கைவசம் வைத்துக்கொண்டு எங்களுக்கு சொத்து கொடுக்க மறுக்கிறார்கள். மேற்படி 4,5 பிரதிவாதிகள் வழக்குச்சொத்திற்குள் எங்களை நுழைய விட மறுக்கிறார்கள் என்றால் சரிதான். வழக்குச்சொத்துகள் அனைத்தும் மாணாவரியா? கிணற்றுப்பாசனமா என்றால் கிணற்றுப்பாசணம் தான். மேற்படி கிணற்றுக்கு மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் பெரியப்பா குழந்தைவேல் கவுண்டர் பெயரில் உள்ளது. மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பில் எனது தகப்பனாருக்கு கூட்டாக பாத்தியம் உள்ளது என்றால் சரிதான்.

4,5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.